## மாமன்றக் கூட்டத்தாள்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29916/2024/WB, நாள் 22.11.2024–ல் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் காலநிலை மீள்தன்மை நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் (Tamil Nadu Climate Resilient Urban Development Program) கீழ் இம்மாநகராட்சியில் ஒரு மாநகர காலநிலை செயல்திட்டக் குழுவினை (City Climate Action Plan Committee) 8 முதல் 12 எண்ணிக்கையிலான (குறைந்தது 50% பெண் பிரதிநிதிகள் உள்ளடங்கிய) உறுப்பினர்களை கொண்ட குழுவினை அமைத்திட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு அமைக்கப்படும் குழுவில் மாநகராட்சி அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் ஆகியோர்களை கொண்ட குழுவினை அமைத்து மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று மன்றத்தீர்மானம் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க திண்டுக்கல் மாநகராட்சியில் கீழ்கண்டவாறு மாநகர காலநிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்களை தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

1) மாண்புமிகு மேயர் (பெண் பிரதிநிதி)
2) மரியாதைக்குரிய துணை மேயர்
3) ஆணையர்
4) மாநகரப்பொறியாளர் (செயற்பொறியாளர்)
5) 5–வது வார்டு மாமன்ற உறுப்பினர் (பெண் பிரதிநிதி)
6) 10–வது வார்டு மாமன்ற உறுப்பினர் (பெண் பிரதிநிதி)
7) 30–வது வார்டு மாமன்ற உறுப்பினர் (பெண் பிரதிநிதி)
8) 43–வது வார்டு மாமன்ற உறுப்பினர் (பெண் பிரதிநிதி)

9) தி/ள். Trust for Environmental Awareness Movement, Coimbatore (தன்னார்வ தொண்டு நிறுவனம்)

10) செயலாளர், ஆர்.எம்.காலனி குடியிருப்போர் நலச்சங்கம், திண்டுக்கல்

எனவே திண்டுக்கல் மாநகராட்சியில் மேலே கண்ட 10 பேர் கொண்ட ஒரு மாநகர காலநிலை செயல்திட்டக் குழுவினை (City Climate Action Plan Committee) அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7695/2023/இ4

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்

05.03.25 5.3.25 5/3/25

உதவிசெயற்பொறியாளர் செயற்பொறியாளர் ஆணையர்

3/3/25

11/3/25

மாண்புமிகு மேயர்

இயல்பு/அவசரம்/சிறப்புகூட்டம்

மாமன்ற தீர்மான எண்: 1648 நாள்: 24-3-2025

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

(ஓம்) திருமதி.ஜோ.இளமதி.பி.பி.ஏ.,
மேயர்,
திண்டுக்கல் மாநகராட்சி
//உண்மைநகல்//

கண்காணிப்பாளர்
நிர்வாக அலுவலர்

24/3/25